

# தி.மு.க. இளைஞர் அணி

## இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

### கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாக புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும், ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்க செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு, இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 20.03.2025 | மதுரை வடக்கு | சோழவந்தான் | சந்தை அருகில், வாடிப்பட்டி | **நாஞ்சில் சம்பத்**, அ.செசிலின் சந்தியா தீப்தி |
| 2 | 20.03.2025 | விழுப்புரம் வடக்கு | செஞ்சி | அப்பம்பட்டு | **பொன்.முத்துராமலிங்கம்**, குடிஅரசு |

**அன்பகம்**, சென்னை – 18.
நாள் : 16–03–2025.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி

---

### தொகுதி மறுவரையறை குறித்து விவாதம் நடத்த அனுமதி வழங்க வேண்டும்!

## நாடாளுமன்ற வளாகத்தில் தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டம்!




புதுடெல்லி, மார்ச் 20 -

தொகுதி மறுவரையறை குறித்து விவாதம் நடத்த அனுமதி வழங்கக் கோரி நாடாளுமன்ற வளாகத்தில் தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி எம்.பி.க்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொகுதி மறுவரையறை குறித்து நாடாளுமன்றத்தில் இரு அவைகளிலும் விவாதிக்க வேண்டும் என்று தி.மு.க. சார்பில் தொடர்ந்து நோட்டீஸ் அளிக்கப்பட்டு வருகிறது. ஆனால் இதற்கு மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவும், மாநிலங்களவை தலைவர் ஜகதீப் தன்கரும் அனுமதி மறுத்து வருகின்றனர்.

இதற்கு தி.மு.க. மற்றும் இந்தியா கூட்டணி கட்சிகள் கடும்எதிர்ப்புதெரிவித்துள்ளன. இந்நிலையில், தொகுதி மறுவரையறை குறித்து விவாதம் நடத்த அனுமதி வழங்கக் கோரி நாடாளுமன்ற வளாகத்தில் தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி எம்.பி.க்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்களவை தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, மாநிலங்களவை தி.மு.க. குழுத் தலைவர் திருச்சி சிவா, மக்களவை தி.மு.க. கொறடா ஆ.ராசா மற்றும் தயாநிதிமாறன் உள்ளிட்ட தி.மு.க. எம்.பி.க்கள் அனைவரும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு, நீதி வேண்டும் என்று முழக்கங்களை எழுப்பினர்.

பஞ்சாப், கேரள மாநிலங்களின் இந்தியா கூட்டணி கட்சி எம்.பி.க்களும் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

## குவைத் நாட்டில் - கழக அயலக அணி சார்பில் இப்தார் நிகழ்ச்சி!

### புதுக்கோட்டை பஷீர் தலைமையில்!

குவைத், மார்ச் 19–

குவைத் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக அயலக அணி சார்பில் பாலிவுட் உணவகத்தில் கட்டுக்கடங்காத கூட்டத்த துடன் கலந்து கொண்டு சிறப்பித்த மாபெரும் சமூக நல்லிணக்க இப்தார் நிகழ்ச்சி புதுக்கோட்டை பஷீர் அகமது தலைமையிலும்! பத்தமடை சிந்தா பக்கீர், ஆலங்குடி கார்த்திக், காட்டூர் ஆறுமுகம், வேலம்புதுக்குடி ஜியாவு தீன், முனசந்தை சிக்கந்தர், காரைக்குடி செந்தில்முருகன், பத்தமடை நாகூர் ஆகியோர்களின் முன்னிலையிலும் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் தாயகத்திலிருந்து சிறப்பு விருந்தினராக வருகை புரிந்த மௌலவி ஷேக் அலி பிர்தௌசி கலந்து கொண்டு திராவிட மாடலின் நல்லாட்சியையும், சமூக நல்லிணக்கத்தையும், நோன்பின் மாண்பயையும், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சிறுபான்மையினருக்கு செய்த நலத்திட்ட உதவிகளை இஸ்லாமிய மார்க்க ரீதியாக முத்தாய்ப்பாய் எடுத்துரைத்தார்.

கழக நிர்வாகத்தினர் புதுகை அருட்செல்வன் ,ஆலஞ்சியார், கறம்பக்குடி ஜாபர்சாதிக் ,புதுவை சபிக் கான், நாசர் சலாவுதீன்,பேராவூரணி ரபீக், மயிலாடுதுறை நாகேந்திரன், போரூர் பிரகாஷ், தளபதி பிரபு, சக்கந்தி தமிழ்ச்செல்வன், கொல்லாபுரம் ஜாகீர்,களந்தை மீரான், கொளத்தூர் கணேஷ், காட்டு பாவா, கார்த்திக் பாலா, திட்டச்சேரி சாகுல் ஹமீது, திருமல்லாபுரம் முத்து மருதையா, சிவகங்கை ஜாகிர் உசேன், ராமநாதபுரம் அஜீஸ், நெல்லை கருத்த பாண்டி, அஜித், கபிலன் , தேரிழந்தூர் தவ்பிக், என ஏராளமான உடன் பிறப்புக்களுடனும் ...

விடுதலைச் சிறுத்தை கள் கட்சி அன்பரசன், தளபதி பேரவை சரவணன், தமிழக வாழ்வுரிமை கட்சி சாகுல், தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகம் லத்தீப், தளபதி பேரவை ராஜா முகமது, மனிதநேய ஜனநாயக கட்சி சர்புதீன்,சமுக ஆர்வலர் ஸ்டீபன் ரொசாரியோ, பாலிவுட் உணவகம் சீனிவாசன், உதவும் கரங்கள் மஜீத், ஓட்டுனர் சேவை மையம் செய்யது இமாம் ஜாஃபர், மக்கள் சேவை மையம் அலிபாய், கலகலப்பு நண்பர்கள் சரவணன், புகைப்பட கலைஞர் பக்ருதீன், போன்ற கூட்டணி கட்சியினரும் தமிழ் பொதுநல சேவை அமைப்பினரும் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.



புதுடெல்லியில், நேற்று முன்தினம் மாலை, நடைபெற்ற ஒன்றிய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் சிவராஜ் சிங் சௌகான் அவர்களின் புதல்வர்கள் மணவிழாவில், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பில், கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற மக்களவைக் கழகக் குழுத் தலைவருமான டி.ஆர். பாலு அவர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்.

### மதுரை வாடிப்பட்டி ஜல்லிக்கட்டுப் போட்டியில்

## உயிரிழந்த மாடுபிடி வீரரின் குடும்பத்திற்கு ஆறுதல் - நிதி உதவி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, மார்ச் 20-**

**மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், கீழக்கரை கிராமத்தில் நடைபெற்ற ஜல்லிக்கட்டுப் போட்டியில் உயிரிழந்த மாடுபிடி வீரரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், கீழக்கரை கிராமத்தில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தில் கடந்த 16.03.2025 அன்று நடைபெற்ற ஜல்லிக்கட்டுப் போட்டியில் மாடுபிடி வீரராக பங்கேற்ற வாடிப்பட்டி வட்டம், மேலக்கால் கிராமம், உட்கடை கச்சிராயிருப்பு கிராமத்தைச் சேர்ந்த திரு.மகேஷ்பாண்டி (வயது 24) த/பெ. முத்துப்பாண்டி என்பவர் மாடு முட்டியதில் பலத்த காயமடைந்து சிகிச்சை அளிக்கப்பட்டதில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்த திரு.மகேஷ்பாண்டி அவர்களின் குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.



மதுரை வடக்கு மாவட்டம் மேற்கு சட்டமன்றத் தொகுதி இளைஞரணி சார்பாக ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில், மாவட்ட துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., தமிழன் பிரசன்னா, ஜி.பி.ராஜா, எஸ்.வி.சுதன், கழக இளம் பேச்சாளர் ஜெயஸ்ரீ ஆகியோர் முன்னிலையில் ஐயப்பன், பரவை அன்புச்செல்வம் மும்மொழிக் கொள்கைக்கு எதிராக உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். உடன் கழக நிர்வாகிகள் எம்.ஆர்.எம்.பாலசுப்பிரமணியம், எம்.சோமசுந்தர பாண்டியன், கே. தனச்செல்வம், ஆசைக்கண்ணன், மூவேந்திரன், வீர கணேசன், இளைஞர் அணி இளங்கோவன், குமரேசன், மருதுராஜா, வெற்றிச்செல்வன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள் பங்கேற்றனர்.